**BRAMPTON** **Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது மூன்றாவது பேருந்து போக்குவரத்து கட்டிடத்திற்காக $128 மில்லியன் நிதி முதலீட்டினை, கூட்டு மற்றும் மாகாண அரசுகளிடமிருந்து பெறுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 15, 2021) – இன்றைய தினம், மேயர் பேட்ரிக் ப்ரவுன்; ப்ராம்ப்ட்டன் நகர கவுன்சிலர்கள்; உள்கட்டமைப்பு மற்றும் சமுதாயங்களுக்கான கூட்டமைப்பு அமைச்சராகிய மேதகு கேத்தரீன் மெக்கன்னா அவர்களின் சார்பாக ப்ராம்ப்ட்டன் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினரும், சர்வதேச மேம்பாட்டுத்துறை அமைச்சரின் பாராளுமன்ற செயலருமாகிய மணீந்தர் சித்து; ஒன்ட்டேரியோவின் உள்கட்டமைப்பு அமைச்சராகிய மேதகு லாரீ ஸ்காட் அவர்கள் சார்பாக ப்ராம்ப்ட்டன் மேற்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினராகிய அமர்ஜோத் சாந்து ஆகியோர் ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து போக்குவரத்துக்கான மூன்றாவது சேமிப்புக் கிடங்கு மற்றும் பராமரிப்பகம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீட்டினை அறிவித்தனர்.

கனடா நாட்டில் முதலீடு செய்வதற்கான திட்டத்தின்படி, பொதுப் பேருந்து போக்குவரத்து உள்கட்டமைப்புத் தொகுதி (Public Transit Infrastructure Stream (PTIS)) மூலமாக $69.9 மில்லியனுக்கும் அதிகமான முதலீட்டினை கனடா அரசாங்கம் செய்கிறது. அதே சமயத்தில், ஒன்ட்டேரியோ அரசு $58.2 மில்லியன் தொகையை வழங்குகிறது, மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் $46.6 மில்லியனுக்கும் அதிகமான தொகையை இந்த திட்டத்திற்கு வழங்குகிறது.

இந்த திட்டப்பணியின் கட்டம் 1 இல் சுமாராக 400,000 சதுர அடிக்கான பேருந்து போக்குவரத்துப் பராமரிப்பகம் மற்றும் சேமிப்புக் கிடங்குக்கான கட்டிட கட்டுமானம் அடங்குகிறது; இதில் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் வகையிலான பணியிடத்திற்கும் கூடுதலாக, பேருந்து நிறுத்துவதற்கான 36 கொள்ளிடம், 40 எண்களிலான தலைக்கு மேலாக இயக்கவல்ல கதவுகள் இருக்கும்; இதில் 250 இயல்தரமான 40 அடி நீளமுள்ள பேருந்துகளை நிறுத்தலாம். மேலும் நிலையான மற்றும் நடமாடுகின்ற உயர்த்திப்பிடிப்பதற்கான கொக்கிசாதனங்கள் நிறுவுதல், வாகனம் ஆய்வு செய்வதற்கான ஒரு பள்ளம், தலைக்கு மேலாக இயங்கும் ஒரு கிரேன், எரிபொருள் சேமிப்பு கிடங்கு மற்றும் உதிரிப்பொருள் விநியோக அமைப்புகள், வாகன இருப்பிடம் அறிகின்ற அமைப்பு மற்றும் வானொலி அமைப்பு மற்றும் பின்புல தயார்நிலை மின் உற்பத்தி ஆகியவை இந்தப் பணிகளில் அடங்கும்.

இந்த புதிய கட்டிட வசதியை நிர்மாணிப்பது என்பது, ப்ராம்ப்ட்டனுக்கான பொது போக்குவரத்து உள்கட்டமைப்பின் திறன், தரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, எதிர்காலத்தில் மின்சார பேருந்துகளுக்கு சேவை செய்வதற்கான உள்கட்டமைப்பை நிறுவவும், குடியிருப்பாளர்களுக்கு தூய்மையான மற்றும் திறமையான போக்குவரத்து முறைகளை உருவாக்கவும் உதவும். இந்த கட்டிட வசதியில் மின்மயமாக்கம் செய்வதற்காக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கூடுதல் நிதியாக M 150 மில்லியனைத் நாடுகிறது.

இந்த நிதியளிப்பானது  இந்தக் கட்டிடத்திற்கான முதல் கட்டத்தை நிர்மாணிப்பதற்கான செலவுகளை ஈடுகட்ட உதவும். இந்த புதிய கட்டிடவசதியானது, 2022 ஆம் ஆண்டு தொடங்கி இரண்டு கட்டங்கள் கொண்ட கட்டுமானத்திற்காக இலக்கு வைக்கப்பட்டுள்ளது, கட்டம் 1 இன் கட்டிடத்திறப்பு 2024 இன் பிற்பகுதியில் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக தற்போது சுற்றுச்சூழல் திட்ட அறிக்கை (ஈபிஆர்) மறுஆய்வு நிலையில் உள்ளது. இதன் அறிக்கை ஏப்ரல் 19 வரை Brampton.ca/transitfacility இல் மீள்பார்வையிட திறக்கப்பட்டுள்ளது. பின்னூட்டக் கருத்து கொண்டவர்கள், இதில் பட்டியலிடப்பட்ட திட்டப்பணிக்கான தொடர்பு கொண்டவர்களுடன் பேசலாம்.

**லின்குகள்**

- கனடா மற்றும் ஒன்ட்டேரியோ அரசுகள் ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்காக பொதுப் பேருந்து போக்குவரத்து உள்கட்டுமான திட்டத்தில் முதலீடு செய்கின்றன (Canada and Ontario invest in public transit infrastructure for residents of Brampton)
- மூன்றாவது பேருந்து போக்குவரத்துக் கட்டிடத்தின் சுற்றுச்சூழல் ரீதியான திட்டப்பணி அறிக்கையின்  மறுபரீசீலனைக் காலம் (Third Transit Facility Environmental Project Report (EPR) Review Period)
- ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பூஜ்யம் எனும் அளவில் உமிழ்வினைக் கொண்டிருக்கின்ற பேருந்துகளுக்காக, வட அமெரிக்காவிலேயே மிகப்பெரிய மின்சாரப் பேருந்துகளுக்கான கட்டிட வசதியை கட்டுமானம் செய்ய திட்டமிட்டிருக்கிறது (City of Brampton plans to construct one of North America’s largest electric bus transit facilities supporting zero-emission buses)

**அறிஞர் கூற்றுக்கள்**

”ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்துக்கான  மூன்றாவது பணிமனை மற்றும் பராமரிப்புக்கான கட்டிட வசதிக்காக, கனடா அரசாங்கம்  மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கம் ஆகியவை செய்யும் முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து  கனடாவிலேயே விரைவாக வளர்ந்து வரும் போக்குவரத்து அமைப்புகளில் ஒன்றாகும்; மேலும் இந்தப் புதிய வசதியானது, எளிதில் அணுகக்கூடிய மற்றும் இணைக்கப்பட்ட போக்குவரத்து நெட்வொர்க்கை ஆதரிக்க உதவும்; இது கட்டப்படுவதன் பேரில், ஆண்டுக்கு சுமார் 850 புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும், மற்றும் கட்டிடம் முழுமையாக கட்டி இயங்க ஆரம்பித்தவுடன் சுமார் 1,000 வேலைவாய்ப்புக்களை உருவாக்கும். நமது நகரை பசுமை நகரமாக ஆக்குவதற்கான நமது நகர சபையின் உறுதிப்பாட்டின் பேரில், இந்தக் கட்டிட வசதியில் பேருந்துகளை மின்மயமாக்குவதற்கு நாங்கள் தொடர்ந்து நிதி தேடுகிறோம்

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நிலைத்து நிற்கும் தன்மையில் ப்ராம்ப்ட்டன் நகரம் முன்னணி வகிக்கிறது மற்றும் எங்கள் பேருந்து போக்குவரத்து நெட்வொர்க் நன்கு இணைக்கப்பட்ட மற்றும் சுற்றுச்சூழலுக்கான நட்புறடன் இருப்பது மட்டுமே இதற்கு பொருத்தமாக இருக்கிறது. ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து போக்குவரத்திற்கான மூன்றாவது சேமிப்பு கிடங்கு மற்றும் பராமரிப்பக வசதிக்காக, அனைத்து மட்ட

அரசாங்கங்களிடமிருந்தும் ஆதரவைப் பெறுவதன் பேரில் ப்ராம்ப்ட்டன் நகர சபை உற்சாகம் கொண்டுள்ளது, இதன் காரணமாக, மின்சாரத்தில் இயங்கக்கூடிய, பூஜ்ஜிய-உமிழ்வு கொண்ட பேருந்துகள் கொண்ட ஒரு தொகுப்பாக மாறி எங்கள் நிலைத்து நிற்கும் தன்மைக்கான இலக்குகளை அடைவதையும் நாங்கள் எதிர்நோக்குகிறோம். ”

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள்1 & 5; தலைமைப்பொறுப்பு, பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரமானது ஒரு நிலைத்திருக்கவல்ல மற்றும் எரிசக்தி-திறமை கொண்ட பேருந்து போக்குவரத்து முறையை உருவாக்குவதற்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது; மேலும் இந்த முதலீடுகள் எங்கள் பசுமை முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க திட்டமாகிய *பேருந்து போக்குவரத்துக்கான மூன்றாவது கட்டிட வசதிக்கு* ஆதரவளிக்கும். ப்ராம்ப்ட்டனுக்கு முதலீடுகளைக் கொண்டுவருவதற்காக எங்கள் வளர்ச்சியின் பங்குதாரர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன்நகரம்*

“இன்றைய முதலீடானது, ப்ராம்ப்ட்டன் நகரின் மிகப்பெரிய பேருந்து போக்குவரத்து பராமரிப்பகம் மற்றும் சேமிப்பு கிடங்கு வசதியை உருவாக்க உதவும். இது வரவிருக்கும் பல ஆண்டுகளில், குடியிருப்பாளர்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான பொது போக்குவரத்து விருப்பத்தெரிவுகளை அணுகுவதை உறுதிசெய்கிறது, மற்றும் நல்ல ஊதியம் தரும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குகிறது; அதே நேரத்தில் பசுமை பேணுதல் மற்றும் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட போக்குவரத்து அமைப்புகளுக்கான எதிர்கால வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. கனடா நாட்டின் உள்கட்டமைப்பு திட்டமானது, ஆயிரக்கணக்கான திட்டங்களில் முதலீடு செய்கிறது, நாடு முழுவதும் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது என்பதுடன், தூய்மையான, மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களையும் உருவாக்குகிறது. ”

- *உள்கட்டமைப்பு மற்றும் சமுதாயங்களுக்கான கூட்டமைப்பு அமைச்சராகிய மேதகு கேத்தரீன் மெக்கன்னா அவர்களின் சார்பாக ப்ராம்ப்ட்டன் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினரும், சர்வதேச மேம்பாட்டுத்துறை அமைச்சரின் பாராளுமன்ற செயலருமாகிய மணீந்தர் சித்து;*

“இந்த முக்கியமான முதலீட்டைச் செய்வதன் மூலமாக, எங்கள் கூட்டாட்சி மற்றும் நகராட்சி சகாக்களுடன் கூட்டு சேர்ந்து மாகாணத்தில் பேருந்து போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை ஒன்ட்டேரியோ அரசு மீண்டும் நிரூபித்து வருகிறது. ஒரு புதிய போக்குவரத்து முனையம் என்பது, ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் தங்கள் குடும்பத்தினருடன் குறைந்த நேரமே பயணத்தில் செலவழித்து, அதிக நேரம் தங்கள் குழும்பத்தினருடன் செலவழிக்க வைப்பதுவே எங்கள் திட்டத்தின் மற்றொரு படியாகும். ”

- *ஒன்ட்டேரியோவின் உள்கட்டமைப்பு அமைச்சராகிய மேதகு லாரீ ஸ்காட் அவர்கள் சார்பாக ப்ராம்ப்ட்டன் மேற்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினராகிய அமர்ஜோத் சாந்து*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

சண்ட்டால் ஆபெர்ட்டின்
பத்திரிக்கை செயலர்
உள்கட்டமைப்பு மற்றும் சமுதாயங்களுக்கான அமைச்சர அலுவலகம்
613.941.0660 | chantalle.aubertin@canada.ca

கிறிஸ்டின் புயோல்ட்
பத்திரிக்கை செயலர்
ஒன்ட்டேரியோவின் உள்கட்டமைப்பு அமைச்சர் மேதகு லாரீ ஸ்காட் அவர்களின் அலுவலகம்
416.454.1782 | christine.bujold@ontario.ca

ஸோஃபியா ஸொவ்ஸா-டயஸ்
தகவல் தொடர்பு கிளை
ஒன்ட்டேரியோ உள்கட்டமைப்பு அமைச்சகம்
437.991.3391 | sofia.sousa-Dias@ontario.ca

ஊடக உறவுகள்
கனடா உள்கட்டமைப்பு
613-960-9251
கட்டணமில்லா எண்: 1.877.250.7154
மின்னஞ்சல்: infc.media.infc@canada.ca
இவற்றில் எங்களைப் பின்பற்றவும்: Twitter, Facebook மற்றும் Instagram
வலைத்தளம்: Infrastructure Canada